**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8051860

1. District மாவட்டம்: திருநெல்வேலி PS காவல்நிலையம்: ல.ஒ.க.பிரிவு Year ஆண்டு: 2021 FIR No. மு.த.அ. எண்: 7/AC/2021 Date நாள்: 30.09.2021

2. (i) Act சட்டம்: 1988 ஆம் ஆண்டின் ஊழல் Sections பிரிவுகள்: 7 and 7 r/w 12.
(ii) Act சட்டம்: தடுப்புச் சட்டம் 2018-ல் Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: திருத்தியமைக்கப்பட்டது. Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 30.09.2021
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை அதிகாலை சுமார் 01.00 மணிக்கு முன்பு.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம் 30.09.2021 - அதிகாலை சுமார் 01.00 மணி.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 55 கி.மீ வடக்கு.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி போக்குவரத்து துறை சோதனைச் சாவடி, உள்வாய், இப்பாட், ஜியபாடி, இந்த்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் அ.நி.ஜெயம் கொண் (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் அ.நிலைநாயகன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 05.06.1973. (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் காவல் துணை கண்காணிப்பாளர் (g) Address : முகவரி லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) திரு.செ.ரவிசங்கர்(58), மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை-II),
2) திரு.M.கணேஷ்குமார்(34), உதவியாளர், 3) திரு.M.பழனிசாமி(48), அலுவலக உதவியாளர், போக்குவரத்து துறை சோதனைச் சாவடி, உள்வாய், இப்பாட், ஜியபாடி, இந்த், திருநெல்வேலி மாவட்டம்,

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
4) திரு.செ.ஆறுமுகவேல்(60), த/பெ.குமாரசாமி, நாங்குநேரி.
5) திரு.A.அலெக்ஸ் பிராங்க்(26), த/பெ. அலெக்ஸ் ராஜ், நாங்குநேரி.
தாமதமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
30.09.2021 at 18.00 hrs.

Name: பெயர் அ.சி.ஜெயமேரி, ..............................
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் துணை கண்காணிப்பாளர்,
இ.பா.த.க.பிரிவு, திருத்தணி.

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 7/AC/2021 U/s 7 and 7 r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வ.எண்-12 ன் தொடர்ச்சி.

30.09.2021 ஆம் தேதி அதிகாலை 01.00 மணியளவில் நான் அலுவலக பொறுப்பில் இருந்தபோது கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் ஜூஜூவாடி போக்குவரத்து உள்வழி சோதனைச்சாவடியில் உள்ள அலுவலர்கள் நேரடியாகவும் மற்றும் தனி நபர்கள் மூலமாகவும் வெளி மாநிலத்தில் இருந்து தமிழ் நாட்டிற்குள் நுழையும் வாகன ஓட்டுநர்களிடமிருந்து கையூட்டாக பணம் பெற்றுக் கொண்டு தற்காலிக அனுமதி சீட்டு வழங்குவதாகவும், நடை சீட்டுகளில் முத்திரை பதிப்பதாகவும் விதிமீறல்கள் ஏதேனும் இருப்பின் அதன்பேரில் இணக்க கட்டணம் விதிக்காமல் அனுப்பி விடுவதாகவும் கிடைத்த ரகசிய தகவலின் பேரில் அரசு சாட்சிகள் திரு.M.அண்ணாதுரை, மண்டல் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், போச்சம்பள்ளி வட்டம், மற்றும் திரு.G.பார்த்திபன், வருவாய் ஆய்வாளர், காவேரிப்பட்டிணம் உள்வட்டம், கிருஷ்ணகிரி வட்டம் (ம) மாவட்டம் ஆகியோர் முன்னிலையில் 30.09.2021 ஆம் தேதி அதிகாலை 04.40 மணி முதல் மாலை 15.00 மணி வரை அந்த உள்வழி சோதனை சாவடி என்னால் ஒரு திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அந்த திடீர் சோதனையின் போது உதவியாளர் திரு.M.கார்த்திகேயன் அவர்களால் அரசு கணக்கில் பல்வேறு தலைப்புகளின் கீழ் 29.09.2021 ஆம் தேதி காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரையில் வசூல் செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.3,14,330/- என்றும், 29.09.2021 ஆம் தேதி இரவு 8 மணி முதல் 30.09.2021 ஆம் தேதி அதிகாலை சுமார் 05.00 மணி வரையில் வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.1,74,188 என்றும் ஆஜர்படுத்தினார். மேற்படி தொகை அரசு சாட்சிகளால் சரிபார்க்கப்பட்டு, அரசு கணக்கில் வரவு வைக்கும் பொருட்டு, உதவியாளர் திரு.M.கார்த்திகேயன் அவர்களிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பிறகு மேற்படி அலுவலகத்தின் கிழக்கு பக்க அறையிலிருந்த ஒரு நபரை நான் விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.M.புவனேசன் என்றும், தான் மேற்படி அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அவர் ஆம் என்று சொல்லி தனது பேண்டின் வலதுபக்க முன்புற பாக்கெட்டிலிருந்து ரூ.1800/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி கேட்க, அந்த பணம் வெளிமாநில

வாகன ஓட்டிகளால் தனக்கு தனியாக கொடுக்கப்பட்ட பணம் என்று தெரிவித்தார். அந்த பணம் வாகன ஓட்டுநர்களால் கையூட்டாக கொடுக்கப்பட்ட பணம் என்பதால் செயல்முறை நடவடிக்கையின்போது என்னால் கைப்பற்றப்பட்டது. பின்னர் அந்த அறையிலிருந்த தனிநபர் திரு.G.ஆறுமுகவேல் அவர்களிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அதற்கு அவர் ஆம் என்று சொல்லி தனது சட்டையின் இடதுபக்க மேல்புற வெளி பாக்கெட்டிலிருந்து ரூ.3,000/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி கேட்க, அது ஓட்டுநர்களிடமிருந்து கையூட்டாக பெற்ற பணம் என்று தெரிவித்தார். அந்த பணம் வாகன ஓட்டுநர்களால் கையூட்டாக கொடுக்கப்பட்ட பணம் என்பதால் செயல்முறை நடவடிக்கையின்போது என்னால் கைப்பற்றப்பட்டது. பிறகு அங்கிருந்த மற்றொரு தனி நபரான திரு.A.அமல்ராஜ் என்வரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அவர் ஆம் என்று சொல்லி தனது பேண்டின் இடதுபக்க முன்புற பாக்கெட்டிலிருந்து ரூ.2,550/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி கேட்க, அது ஓட்டுநர்களிடமிருந்து கையூட்டாக பெற்ற பணம் என்று தெரிவித்தார். அந்த பணம் வாகன ஓட்டுநர்களால் கையூட்டாக கொடுக்கப்பட்ட பணம் என்பதால் செயல்முறை நடவடிக்கையின்போது என்னால் கைப்பற்றப்பட்டது. பிறகு அந்த அலுவலகத்தின் மத்திய அறையில் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.G.சீனிவாசன் அவர்களின் இருக்கைக்கு எதிரே இருந்த மேசையின் மீதிருந்த அட்டைபெட்டியை அரசு சாட்சிகளின் முன்னிலையில் சோதனை செய்ததில், அதில் பணம் இருந்தது. அதை அரசு சாட்சிகளின் உதவியுடன் எண்ணிப்பார்க்கையில் மொத்தம் ரூ.51,300/- இருந்தது. அதைபற்றி மோட்டார் வாகன ஆய்வாளரிடம் விளக்கம் கேட்க, அந்த பணம் வாகன ஓட்டுனர்களிடமிருந்து கையூட்டாக பெறப்பட்ட பணம் என்ற விவரத்தினை தெரிவித்தார். மேற்படி பணம் வாகன ஓட்டுனர்களால் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.G.சீனிவாசன் அவர்களுக்கு கையூட்டாக கொடுக்கப்பட்ட பணம் என்பதால் அந்த பணம் செயல்முறை நடவடிக்கையின்போது என்னால் கைப்பற்றப்பட்டது. அதன்பிறகு மோட்டார் வாகன ஆய்வாளரின் இருக்கைக்கு வடக்கே பின்புறமிருந்த கணினி அறைக்கு சென்று அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்தபோது மேற்படி அறையின் மேற்கு மூலையின் கணினி மேசையின் மீதிருந்த சர்வரின் மேல்புறத்திலிருந்து ஒரு அட்டை பெட்டியினை சோதனை செய்தபோது, அதில் இரண்டு காக்கிநிற கவர்கள் இருந்தன. அதனை சாட்சிகள்

முன்னிலையில் சோதனை செய்தபோது அதில் மொத்தம் ரூ.90,000/- இருந்தது. அந்த பணம் வாகன ஓட்டுனர்களால் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.G.சீனிவாசன் அவர்களுக்கு கையூட்டாக கொடுக்கப்பட்ட பணம் என்பதால் அந்த பணம் காக்கிநிற கவர்களுடன் செயல்முறை நடவடிக்கையின்போது என்னால் கைப்பற்றப்பட்டது. பிறகு மேற்படி அறையின் வடக்கு சுவற்றின் மத்தியில் பொருத்தப்பட்டுள்ள இரும்பினாலான DVR பாக்ஸினை சோதனை செய்தபோது அதில் ஒரு காக்கிநிற கவர் இருந்தது. அதனை அரசு சாட்சிகளின் முன்னிலையில் சோதனை செய்தபோது அதில் ரூ.60,000/- இருந்தது. அந்த பணம் வாகன ஓட்டுனர்களால் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.G.சீனிவாசன் அவர்களுக்கு கையூட்டாக கொடுக்கப்பட்ட பணம் என்பதால் அந்த பணம் காக்கிநிற கவர்களுடன் செயல்முறை நடவடிக்கையில் என்னால் கைப்பற்றப்பட்டது. அதன்பிறகு அந்த அறையின் கிழக்குபுறத்திலிருந்த கணினி மேசையினை சோதனை செய்தபோது, அந்த கணினி மேசையின் இடதுபக்க கீழ் பகுதியிலிருந்த PAPERLINE என்ற A4 பேப்பர் கவரினுல் ஒரு காக்கிநிற கவர் இருந்தது. அதனை அரசு சாட்சிகளின் முன்னிலையில் சோதனை செய்தபோது அதில் ரூ.50,000/- இருந்தது. அந்த பணம் வாகன ஓட்டுனர்களால் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.G.சீனிவாசன் அவர்களுக்கு கையூட்டாக கொடுக்கப்பட்ட பணம் என்பதால் அந்த பணம் காக்கிநிற கவர்களுடன் செயல்முறை நடவடிக்கையில் என்னால் கைப்பற்றப்பட்டது. இது சம்மந்தமாக 30.09.2021 ஆம் தேதியன்று அதிகாலை 04.40 மணி முதல் மாலை 15.00 மணிவரையில் என்னால் ஒரு செயல்முறை நடவடிக்கை தயார் செய்யப்பட்டது. அதன் நகலை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.G.சீனிவாசன் அவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. பிறகு கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ,2,58,650/- உடன் கிருஷ்ணகிரி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து பொது ஊழியரான மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.G.சீனிவாசன் அவர்கள் வாகன ஓட்டுனர்களுக்கு தனது அலுவல் பணியை முறையற்ற வகையிலும், நேர்மையற்ற முறையிலும் செய்து கொடுத்தமைக்காக அவர்களிடமிருந்து கையூட்டாக பணம் பெற்றுக்கொண்ட குற்றத்திற்காக இன்று 30.09.2021 ஆம் தேதி 17.00 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 7/AC/2021 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in

2018 ன்படியும், மேலும் பொது ஊழியரான மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.G.சீனிவாசன் அவர்கள் வாகன ஓட்டுனர்களிடமிருந்து பெறப்பட்ட கையூட்டு பணத்தை மேற்படி சோதனை சாவடியில் பணிபுரியும் உதவியாளர் திரு.M.கார்த்திகேயன் மற்றும் அலுவலக உதவியாளர் திரு.M.புவனேசன் அவர்கள் கூட்டாக பிரித்துக்கொள்ளும் பொருட்டு செயல்பட்டதால் அவர்கள் மீது u/s 7 r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 மேலும், பொது ஊழியரான மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.G.சீனிவாசன் அவர்கள் வாகன ஓட்டுனர்களிடமிருனந்து கையூட்டாக பணம் பெறுவதற்கு தனி நபர்களான திரு.G.ஆறுமுகவேல் மற்றும் திரு.A.அமல்ராஜ் அவர்கள் தூண்டியதற்காக அவர்கள் மீது u/s 7 r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 ன்படியும் குற்றவழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலை கிருஷ்ணகிரி மாவட்ட சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டது.

அ.சி.ரா.[illegible]
30-09-2024

Dy. Supdt. of Police
Vigilance & Anti-Corruption,
Krishnagiri